சொத்துக் குவிப்பு வழக்கு: முன்னாள் அமைச்சர் சி.விஜயபாஸ்கருக்கு அமலாக்கத் துறை அழைப்பாணை

சென்னை, நவ. 3: சொத்துக் குவிப்பு வழக்கில் முன்னாள் அமைச்சர் சி. விஜயபாஸ்கருக்கு அமலாக்கத் துறை அழைப்பாணை அனுப்பியுள்ளது.



தமிழகத்தில் கடந்த 2011-ஆம் ஆண்டுமுதல் 2021-ஆம் ஆண்டு வரையிலான அதிமுக ஆட்சிக் காலத்தில் 2013-ஆம் ஆண்டுமுதல் 2021-ஆம் ஆண்டு வரை சுகாதாரத் துறை அமைச்சராக சி.விஜயபாஸ்கர் இருந்தார். கடந்த 2021-ஆம் ஆண்டு திமுக ஆட்சிக்கு வந்தவுடன், அதிமுக முன்னாள் அமைச்சர்கள் மீது சொத்துக் குவிப்பு வழக்குகள் பதிவு செய்யப்பட்டன. சி.விஜயபாஸ்கர் மீதும் வருமானத்துக்கு அதிகமாக ரூ.35.79 கோடி சொத்து சேர்த்ததாக வழக்குப் பதியப்பட்டது.

இதில் சட்டவிரோத பணப் பரிமாற்றம் நிகழ்ந்திருப்பதாகப் புகார் எழுந்தது. இதையடுத்து, தமிழக ஊழல் தடுப்புத் துறை, அது தொடர்பான விசாரணையை அமலாக்கத் துறைக்கு பரிந்துரை செய்தது. அந்தப் பரிந்துரையின் அடிப்படையில் அமலாக்கத் துறை, பண முறைகேடு தடுப்புச் சட்டத்தின் கீழ் தனியாக வழக்குப் பதிவு செய்து, விசாரணை நடத்தி வருகிறது.

இந்த வழக்கு தொடர்பாக புதுக்கோட்டை மாவட்டம், இலுப்பூரில் உள்ள விஜயபாஸ்கர் வீடு உள்பட பல்வேறு இடங்களில் கடந்த 2024-ஆம் ஆண்டு மார்ச் 21-ஆம் தேதி அமலாக்கத் துறை சோதனை செய்தது.

இந்நிலையில், இந்த வழக்குத் தொடர்பாக சி.விஜயபாஸ்கர், அவரின் மனைவி ரம்யா ஆகியோர் விசாரணைக்கு ஆஜராகுமாறு அமலாக்கத் துறை அழைப்பாணை அனுப்பியுள்ளது. சென்னையில் உள்ள அமலாக்கத் துறை அலுவலகத்தில் நவ. 6-ஆம் தேதி நடைபெறும் விசாரணையில் விஜயபாஸ்கரும், அடுத்த வாரம் நடைபெறும் விசாரணையில் அவரின் மனைவி ரம்யாவும் ஆஜராக வேண்டும் என்று அழைப்பாணையில் குறிப்பிடப்பட்டுள்ளதாகக் கூறப்படுகிறது.

சில மாதங்களுக்கு முன்பு அதிமுகவில் இருந்து விலகிய சி.விஜயபாஸ்கர், தவெகவில் புதுக்கோட்டை மாவட்ட அமைப்புச் செயலராக உள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது.

பாஜக தேசியத் தலைவர் நிதின் நபின் நவ. 25-இல் நெல்லை வருகை


திருநெல்வேலி, நவ. 3: பாஜக தேசியத் தலைவர் நிதின் நபின் திருநெல்வேலியில் வரும் 25-ஆம் தேதி நடைபெறவுள்ள பொதுக்கூட்டத்தில் பங்கேற்கிறார்.

தமிழகத்தில் சுற்றுப்பயணம் செய்து நிர்வாகிகளை சந்தித்து கட்சியை வலுப்படுத்துவதற்காக வரும் அவர், பொதுக்கூட்டத்தில் பங்கேற்றுப் பேசுகிறார். பின்னர், நவ. 26-இல் கோவை மாவட்டத்தில் நடைபெறும் பல்வேறு நிகழ்ச்சிகளில் பங்கேற்கவுள்ளதாக பாஜக வட்டாரங்கள் தெரிவித்தன.

அவரது வருகையின்போது, மாநில, மாவட்ட நிர்வாகிகளை சந்தித்து ஆலோசிக்க உள்ளதாகக் கூறப்படுகிறது. கடந்த கால தேர்தல்களில் பாஜகவுக்கு வாக்கு சதவீதம் குறைந்தது தொடர்பாகவும், தொடர்ந்து மேற்கொள்ள வேண்டிய பூர்வாங்க பணிகள் குறித்தும் அவர் அறிவுரைகளை வழங்குவார் என எதிர்பார்க்கப்படுகிறது.

மர்ம நோயால் 8 ஆயிரம் கோழிகள் உயிரிழப்பு

கடலூர், நவ.3: கடலூர் மாவட்டத்தில் கோழிப் பண்ணைகளில் கடந்த சில நாள்களாக 8 ஆயிரத்துக்கும் அதிகமான கோழிகள் மர்ம நோயால் அடுத்தடுத்து உயிரிழந்த நிலையில், பாதிக்கப்பட்ட பகுதிகளில் உள்ள கோழிப் பண்ணைகளில் இருந்து 3 மாதங்களுக்கு கோழிகளை விற்பனை செய்யவும், புதிய கோழிக்குஞ்சுகளை பண்ணைகளுக்கு கொண்டுவரவும் கால்நடை பராமரிப்புத் துறை தடை விதித்துள்ளது.



நடுத்திட்டு பகுதியில் உள்ள பண்ணையில் உயிரிழந்த கோழிகள்.

கடலூர் மாவட்டத்தில் தொடர் மழை மற்றும் வெயில் காரணமாக ஏற்பட்டுள்ள பருவநிலை மாற்றத்தையடுத்து, திருச்சோபுரம், நடுத்திட்டு, தம்மனாம்பேட்டை, குறிஞ்சிப்பாடி உள்ளிட்ட பகுதிகளில் உள்ள கோழிப் பண்ணைகளில் கடந்த சில நாள்களாக கோழிகள் உயிரிழந்து வருகின்றன. 6 பண்ணைகளில் மொத்தம் 5,600 கோழிகள் உயிரிழந்தது கண்டறியப்பட்டது.

உயிரிழந்த கோழிகள் அனைத்தும் மாவட்ட நிர்வாகத்தின் உதவியுடன், நிலையான செயல்பாட்டு நடைமுறைகளின்படி ஆழமான குழிகளில் புதைக்கப்பட்டன.

பறவை காய்ச்சல் இல்லை: இதுகுறித்து கால்நடை பராமரிப்புத் துறை இணை இயக்குநர் முருகவேல் செய்தியாளர்களிடம் கூறியதாவது:

நாமக்கல்லில் உள்ள கோழி நோய் கண்டறியும் ஆய்வகத்தின் (நவ.2) ஆய்வறிக்கைப்படி, கோழிகளில் குறைந்த பாதிப்பை ஏற்படுத்தும் பறவை காய்ச்சல் தீநுண்மி தொற்று இல்லை என்பது தெரியவந்துள்ளது.

முன்னெச்சரிக்கை நடவடிக்கையாக பாதிக்கப்பட்ட பகுதிகளில் உள்ள அனைத்து கோழிப் பண்ணை உரிமையாளர்களும் 3 மாதங்களுக்கு கோழிகளை விற்பனை செய்ய வேண்டாம் என்றும், புதிய கோழிக்குஞ்சுகளை பண்ணைகளுக்கு கொண்டுவரவோ அல்லது இருப்பில் வைக்கவோ வேண்டாம் என்றும் அறிவுறுத்தப்பட்டுள்ளனர் என்றார் அவர்.

ரத்த அழுத்த கண்காணிப்புக் கருவிகள் உற்பத்தி: சென்னை அருகே சர்வதேச தொழிற்சாலை

சென்னை, நவ. 3: உயர் ரத்த அழுத்த பாதிப்பு சமூகத்தில் அதிகரித்துவரும் நிலையில், மருத்துவ உபகரணத் தயாரிப்பில் சர்வதேச அளவில் முன்னணியில் உள்ள ஜப்பானின் 'ஓம்ரான் ஹெல்த்கேர்' நிறுவனம், இந்தியாவில் தனது முதலாவது ரத்த அழுத்தக் கண்காணிப்பு சாதன ஆலையைச் சென்னை அருகே பொன்னேரியில் அமைத்து உற்பத்தியைத் தொடங்கியுள்ளது.

நாடு முழுவதும் சுமார் 30 கோடி பேர் உயர் ரத்த அழுத்த பாதிப்பு அபாயத்தில் உள்ளதால், தொடக்க நிலையிலேயே நோயைக் கண்டறிந்து உயர்தர மருத்துவக் கருவிகளை எளிய மக்களுக்கும் கொண்டு சேர்ப்பதே இந்த உற்பத்திக் கட்டமைப்பின் நோக்கம் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

திருவள்ளூர் மாவட்டம், பொன்னேரி மஹிந்திரா தொழில் பூங்காவில்ரூ.191 கோடி முதலீட்டில், 24,000 சதுர மீட்டர் பரப்பளவில் இத்தொழிற்சாலை நிறுவப்பட்டுள்ளது. 5 நவீன உற்பத்திப் பிரிவுகளுடன் சுமார் 120 பணியாளர்களுடன் செயல்படத் தொடங்கியுள்ள இந்த ஆலையில், ஜப்பான் மற்றும் வியத்நாம் நாடுகளின் நுட்பமும், தரச் சான்றுக்கான கட்டுப்பாடுகளும் பின்பற்றப்படுவதாக அதன் நிர்வாகிகள் தெரிவித்துள்ளனர்.

இங்கு உள்நாட்டு விநியோகம் மற்றும் சர்வதேச ஏற்றுமதிக்கென தனித்தனி வகைகளில் உபகரணங்கள் தயாரிக்கப்படுகின்றன. குறிப்பாக ஓம்ரான் கனெக்ட் செயலி மற்றும் ப்ளூடூத் மூலம் ரத்த அழுத்தத்தைக் கண்காணிக்கும் கருவிகளும் உற்பத்தி செய்யப்படுகின்றன. எதிர்வரும் 2028-ஆம் ஆண்டுக்குள் உற்பத்தியை 10 மடங்கு உயர்த்தி, ஆண்டுக்கு 30 லட்சம் கருவிகளைத் தயாரிக்கவும், ஆஸ்துமா போன்ற நோய்களுக்கான நெபுலைசர் தயாரிப்பைத் தொடங்கவும் அந்நிறுவனம் திட்டமிட்டுள்ளது.

மத்திய அரசின் 'இந்தியாவில் தயாரிப்போம்' திட்டத்தின் கீழ் தமிழ்நாடு அரசின் வழிகாட்டல் நிறுவனத்தின் ஆதரவோடு இந்த உற்பத்திக் கட்டமைப்பைத் தொடங்கியுள்ளதாக ஜப்பானிய தூதரக அதிகாரிகளும், ஓம்ரான் நிறுவனத்தினரும் தெரிவித்துள்ளனர்.

அண்டை மாநிலங்களைவிட தமிழகத்தில் வளர்ச்சி குறைவு

தங்கம் தென்னரசு மீண்டும் திட்டவட்டம்

சென்னை, நவ.3: அண்டை மாநிலங்களைவிட, தமிழகத்தில் வளர்ச்சி பின்தங்கியுள்ளதாக முன்னாள் நிதியமைச்சர் தங்கம் தென்னரசு மீண்டும் திட்டவட்டமாகத் தெரிவித்துள்ளார்.



தமிழகத்தில் சொந்த உற்பத்தி மூலம் வரும் ஜிஎஸ்டி வருவாய் பின்தங்கியுள்ளதாக தங்கம் தென்னரசு கூறிய குற்றச்சாட்டுக்கு, தமிழக நிதி அமைச்சர் மரிய வில்சன் மறுப்பு தெரிவித்திருந்தார். இந்நிலையில் தங்கம் தென்னரசு எக்ஸ் தளத்தில் செவ்வாய்க்கிழமை வெளியிட்ட பதிவு: எனது பதிவில் என்ன குறிப்பிடப்பட்டிருக்கிறது என்பதையே கருத்தில் கொள்ளாமல், நிதியமைச்சர் மரியவில்சன், வழக்கம் போல பதிலளிக்க முயன்றுள்ளார்.

நிகழாண்டில் அக்டோபரில் ஜிஎஸ்டி வருவாய் வளர்ச்சி 3 சதவீதம் என்ற அளவில் மட்டுமே அதிகரித்துள்ளதை என்னுடைய பதிவிலேயே நான் தெளிவாகச் சுட்டிக்காட்டியுள்ளேன். அதே வேளையில், இறக்குமதியால் கிடைக்கும் வரி வருவாயால்தான் ஒட்டுமொத்த வரி வருவாயில் உயர்வு காணப்படுகிறதே தவிர, மாநிலத்தின் சொந்த உற்பத்தி மூலம் ஈட்டப்படும் வரிவருவாயால் அல்ல என்பதையும் நான் எடுத்துக்காட்டி இருக்கிறேன்.

அண்டை மாநிலங்களின் வருவாய் வளர்ச்சியோடு ஒப்பிடும்போது நாம் மிகப்பெரிய அளவில் பின் தங்கியிருக்கிறோம் என்ற உண்மையை ஒப்புக்கொண்டு, மாநிலத்தின் சொந்த உற்பத்தியையும், விற்பனையையும் பெருக்கிப் பொருளாதார மேம்பாட்டுக்கும், வேலைவாய்ப்புகளுக்கும் வழிவகை காண அரசு முயற்சிக்க வேண்டுமே தவிர, புண்ணுக்குப் புனுகு பூச முயற்சிப்பதில் பயனேதுமில்லை எனப் பதிவிட்டுள்ளார் தங்கம் தென்னரசு.

இந்தியன் வங்கி — கீழ்பாக்கம் கிளை
எண்.103, நியூ ஆவடி ரோடு, கீழ்பாக்கம், சென்னை - 600 010.
தொலைபேசி : 044-2646 1045 / 1262. மின்னஞ்சல் : kilpauk@indianbank.bank.in

பொது அறிவிப்பு

இந்தியன் வங்கியால் அமைக்கப்பட்ட வேண்டுமென்றே கடன் திரும்பச் செலுத்தாதோர் கண்டறியும் குழு (WDIC), பின்வரும் கடன்தாரர்/ ஜாமீன்தாரர் / மேம்பாட்டாளர் / இயக்குனர் / நிறுவனத்தின் நிர்வாக விவகாரங்களுக்கு பொறுப்பான நபர்கள் வேண்டுமென்றே கடனை திரும்பச் செலுத்தாதவர்களாக அடையாளம் காணும் செயல்முறையை தொடங்கியுள்ளது மற்றும் 06.10.2026 தேதியிட்ட WDIC உத்தரவு அளிக்கப்பட்டுள்ளது.

மேற்சொன்ன உத்தரவில் வேண்டுமென்றே திரும்பச் செலுத்தாதன் நிகழ்வு(கள்) குறித்த விவரங்கள் உள்ளன மற்றும் WDIC உத்தரவு கிடைத்த தேதியிலிருந்து 15 நாட்களுக்குள் அவர்களிடமிருந்து சமர்ப்பிப்புகளை வழங்குமாறு கோரப்பட்டது.

மேற்படி 06.10.2026 தேதியிட்ட உத்தரவு, அவர்களால் வழங்கப்பட்ட முகவரிகளுக்கு விரைவு அஞ்சல் / பதிவுத்தபால் மூலம் அனுப்பப்பட்டன, ஆனால் அஞ்சல் கண்காணிப்பு பதிவுகளின்படி, அது பட்டுவாடா ஆகாமல் திருப்பி அனுப்பப்பட்டுள்ளது/வழங்க முடியவில்லை.

அந்த முகவரியாளரின் விவரங்கள் கீழே கொடுக்கப்பட்டுள்ளன :-

(1) திரு. S. முத்துவேல், (கடன்தாரர்), த/பெ செங்கேணி, எண்.1/2376, சுப்பிரமணி தெரு, சிவந்தி ஆதித்தன் நகர், திருவள்ளூர் ஹை ரோடு, பம்மதுகுளம், அம்பத்தூர், திருவள்ளூர் - 600 052.
(2) திருமதி. கலைசெல்வி M, (இணை-கடன்தாரர்), க/பெ திரு முத்துவேல், எண்.1/2376, சுப்பிரமணி தெரு, சிவந்தி ஆதித்தன் நகர், திருவள்ளூர் ஹை ரோடு, பம்மதுகுளம், அம்பத்தூர், திருவள்ளூர் - 600 052.

மேலே குறிப்பிடப்பட்டுள்ள நபர்(கள்), இந்த பொது அறிவிப்பின் மூலம் இந்தியன் வங்கி, கீழ்பாக்கம் கிளையை அணுகி அறிவிப்பை பெற்றுக்கொண்டு, இந்த அறிவிப்பு வெளியிடப்பட்ட தேதியிலிருந்து 15 நாட்களுக்குள் அந்த அறிவிப்புக்கு எதிரான அவரின் விளக்கங்களை சமர்ப்பிக்குமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறார்.

குறிப்பிடப்பட்ட காலக்கெடுவிற்குள் பதிலளிக்க தவறினால், இந்த உத்தரவு முறையாக வழங்கப்பட்டதாக கருதப்பட்டு மற்றும் உண்மைகள் மற்றும் பதிவுகளின்படி கிடைக்கக்கூடிய ஆவணங்களின் அடிப்படையில், ரிசர்வ் வங்கியின் வழிகாட்டுதல்களுக்கு இணங்க மேலதிக நடவடிக்கைகளை WDRC மேற்கொள்ளும் என்பது தெரிவிக்கப்படுகிறது.

தேதி : 04.11.2026
இடம் : சென்னை
கிளை மேலாளர், இந்தியன் வங்கி, கீழ்பாக்கம் கிளை, வேண்டுமென்றே கடன் திரும்பச் செலுத்தாதோர் கண்டறியும் குழு சார்பாக.

யூனிட் ரன் கேன்டீன் / கூடுதல் விற்பனை மையம், OD ஆவடி, சென்னை

OD ஆவடியில் உள்ள URC / கூடுதல் விற்பனை மையம்-இல் உதவி மேலாளர், MTS & ஹவுஸ் கீப்பர் ஆகிய பதவிகளுக்கு விண்ணப்பங்கள் வரவேற்கப்படுகின்றன.

01 X உதவி மேலாளர்:
கல்வித் தகுதி - பட்டதாரி. விண்டோஸ் மற்றும் MS Office கணினி அறிவு. மனிதவள மேலாண்மை, நிதி கையாளுதல், கணக்கியல் மற்றும் சரக்கு மேலாண்மை ஆகியவற்றில் முன் அனுபவம் உள்ளவர்களுக்கு முன்னுரிமை அளிக்கப்படும். பிரிவு: முன்னாள் ராணுவ வீரர்/பாதுகாப்புத் துறை குடிமகன்/மருத்துவ ரீதியாக/உடல் ரீதியாக தகுதியுடையவர்.
சம்பளம் ரூ. 25,000/- முதல் ரூ. 30,000/- வரை (EPF மற்றும் ESIC உட்பட)

09 X MTS:
கல்வித் தகுதி: MS Office உள்ளிட்ட அடிப்படை கணினி அறிவுடன் 10+2. இது போன்ற பணிகளில் முன் அனுபவம் உள்ளவர்களுக்கு முன்னுரிமை அளிக்கப்படும். பிரிவு: முன்னாள் ராணுவ வீரர்/ பாதுகாப்புத் துறை குடிமகன்/ பொதுமக்கள். மருத்துவ ரீதியாக/ உடல் ரீதியாக தகுதியுடையவர். சம்பளம் ரூ. 14,616/- (EPF மற்றும் ESIC உட்பட)

01 X ஹவுஸ் கீப்பர்
கல்வித் தகுதி: - 8ஆம் வகுப்பு மற்றும் 10ஆம் வகுப்பு தேர்ச்சி/தோல்வி. இது போன்ற பணிகளில் முன் அனுபவம் உள்ளவர்களுக்கு முன்னுரிமை அளிக்கப்படும். பிரிவு: முன்னாள் ராணுவ வீரர் (ESM) / பாதுகாப்புத் துறை குடிமகன் / மருத்துவ ரீதியாக / உடல் ரீதியாக தகுதியுள்ள குடிமக்கள். சம்பளம்: ரூ. 14,148/- (EPF மற்றும் ESIC உட்பட).
சம்பளம் ரூ. 14,148/- (EPF மற்றும் ESIC உட்பட)

குறிப்பு:
1. விண்ணப்பம், OIC, யூனிட் ரன் கேன்டீன், OD ஆவடி, முத்தா புதுப்பேட்டை, சென்னை-600055 என்ற முகவரிக்கு 20 நவம்பர் 2026 அன்று அல்லது அதற்கு முன்னர் பதிவுத் தபால் மூலம் சென்றடைய வேண்டும்.
2. கையால் எழுதப்பட்ட விண்ணப்பம், சுயவிவரம், அனைத்து ஆவணங்களின் நகல்கள் மற்றும் 2 வண்ணப் புகைப்படங்கள் ஏற்றுக் கொள்ளப்படும்.
3. நேர்காணலின் போது விண்ணப்பதாரர்கள் தங்களது அசல் ஆவணங்களைக் கொண்டு வர வேண்டும்.
4. 20 நவம்பர் 2026-க்குப் பிறகு எந்த விண்ணப்பமும் ஏற்றுக்கொள்ளப்படாது.
5. விண்ணப்பதாரர்களுக்கான தேர்வு/நேர்காணல் 25 நவம்பர் 2026 அன்று நடைபெறும். அனைத்து விண்ணப்பதாரர்களும் 25 நவம்பர் 2026 அன்று காலை 09:00 மணிக்கு, OD ஆவடி பகுதியில் உள்ள 'மந்திர் கேட்' நுழைவாயிலில் ஆஜராக வேண்டும்.
6. வேலைவாய்ப்பு/தேர்வு என்பது ஒரு காலண்டர் ஆண்டில், 11 மாத காலத்திற்கு ஒப்பந்த அடிப்படையில் மட்டுமே அமையும்.
7. முன்னாள் கேன்டீன் பணியாளர்களும் விண்ணப்பிக்கத் தகுதியுடையவர்கள்.
8. தொடர்பு எண்: 7708316297 / 9640281814
9. ஊதியம் மற்றும் படிகள் உள்ளிட்ட விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகளை எந்தவொரு நீதிமன்றத்திலும் எதிர்த்து முறையிட முடியாது.

முன்னுரிமை:
P-I - BC (உயிரிழப்பு ஏற்பட்ட) பணியாளர்களின் விதவைகள்/வாரிசுகள்
P-II - BC (உயிரிழப்பு ஏற்படாத) பணியாளர்களின் மனைவிகள்/வாரிசுகள்
P-III - PC (-உயிரிழப்பு ஏற்பட்ட) பணியாளர்களின் விதவைகள்/வாரிசுகள்
P-IV - PC (உயிரிழப்பு ஏற்படாத) பணியாளர்களின் மனைவிகள்/வாரிசுகள்
P-V - ஓய்வூதியம் பெறாத முன்னாள் படைவீரர்கள் (ESM) விதவைகள்/ மனைவிகள் / வாரிசுகள் (உயிருடன் இருப்பவர்கள் மற்றும் மறைந்தவர்கள் என இரு தரப்பினரும்)
P-VI - ஓய்வூதியம் பெறும் முன்னாள் படைவீரர்கள் (ESM) விதவைகள்/ மனைவிகள்/ வாரிசுகள் (உயிருடன் இருப்பவர்கள் மற்றும் மறைந்தவர்கள் என இரு தரப்பினரும்)
P-VII - முன்னாள் படைவீரர்கள் (ESM) / பாதுகாப்புத்துறை குடிமைப் பணியாளர்கள்
P-VIII - பணியில் உள்ளவர்களின் குடும்பத்தினர்/வாரிசுகள்
P-IX - குடிமக்கள்

ICICI Bank
கிளை அலுவலகம் : ICICI பேங்க் லிட், 40-1-127, 128 மற்றும் 129 RIBG, 4வது தளம், முரளி சேம்பர்ஸ், MG ரோடு, விஜயவாடா-520010

பொது அறிவிப்பு - கடனீட்டுச் சொத்து விற்பனைக்கான டெண்டருடன் கூடிய மின்-ஏலம்

[பார்க்க விதி 8(6) க்கான விதிமுறைகள்]

அசையாச் சொத்துக்கள் விற்பனைக்கான அறிவிப்பு

அசையா சொத்துகளின் விற்பனைக்கான மின்-ஏல விற்பனை அறிவிப்பு - 2002-ம் ஆண்டு கடனீட்டுச் சொத்துக்களை ரொக்கமாக்குதல், நிதிச் சொத்துக்களைச் சீரமைத்தல் மற்றும் கடனீட்டுச் சொத்து மீதான உரிமை அமலாக்கச் சட்டம் மற்றும் அதற்குத் தொடர்புடைய 2002-ம் ஆண்டு கடனீட்டுச் சொத்து மீதான உரிமை அமலாக்க விதிகள் 8(6)-ஷரத்துகள் கீழ்.

இதன் மூலம் பரவலாக பொது மக்களுக்கும், குறிப்பாக கடன்தாரர்களுக்கும், ஜாமீன்தாரர்களுக்கும் அறிவிப்பது என்னவென்றால், ஈடு பெற்று கடன் வழங்கியுள்ள வங்கியிடம் அடமானம்/ஈடு வைக்கப்பட்டுள்ள இங்கு கீழே விவரிக்கப்பட்டுள்ள அசையா சொத்துகள், ICICI பேங்க் லிமிடெட்-ன் அதிகாரபூர்வ அலுவலரால் நேரடி சுவாதீனத்தில் (PHYSICAL POSSESSION) எடுத்துக் கொள்ளப்பட்டு, அந்தச் சொத்துகள் பின்வருமாறு "உள்ள இடத்தில் உள்ளவாறு, உள்ளது உள்ளவாறு, உள்ள இடத்தில் உள்ளவை" எனும் அடிப்படையில் விற்பனை செய்யப்படுகின்றன. அதன் சுருக்கமான விவரங்கள் பின்வருமாறு:

வ. எண்.	கடன்தாரர்(கள்) / கூட்டு-கடன்தாரர்கள் / ஜாமீன்தாரர்களின் பெயர் / கடன் கணக்கு எண்.	கடனீட்டுச் சொத்து(க்களின்) விபரங்கள் தெரிந்த வில்லங்கங்கள் ஏதேனும் இருப்பின் அவற்றுடன்	நிலுவை தொகை	குறைந்தபட்ச கேட்பு விலை / டேவணித் தொகை	சொத்து ஆய்வு நாள் & நேரம்	மின்-ஏல நாள் & நேரம்
(A)	(B)	(C)	(D)	(E)	(F)	(G)
1.	திரு. கோரா திலீப்சந்திர சோனி (கடன்தாரர்) திருமதி. நிர்மலா கோரா (கூட்டுக் கடன்தாரர்) கடன் கணக்கு எண். LBCHE00005131075	அனைத்து இன்றியமையாத பகுதிகளும் கொண்ட, 34.45 சதுர மீட்டர் அல்லது 28.80 சதுர கஜம் இது மொத்த நிலப் பரப்பளவான 594 சதுர மீட்டர் அல்லது 496.64 சதுர கஜத்தில் அடங்கியது. இதனுடன் பாதி - முடிந்த நிலையிலுள்ள ஃபிளாட் எண். 503 இதன் கீழ்க்கட்டுமானப் பரப்பளவு 960 சதுர அடி (பொதுப் பகுதிகள் மற்றும் கார் நிறுத்துமிடத்தையும் உள்ளடக்கியது) இது "ஸ்ரீ ஸ்ரீநிவாசா டோபாஸ்" என்ற அடுக்குமாடிக் கட்டத்தில் உள்ளது அமைவிடம் கோரண்ட்லா கிராமம், குண்டூர் நகர மாநகராட்சி வட்டாரம், குண்டூர் மாவட்டம் இதனுடன் ஸ்டில்ட் தளத்தில் கார் நிறுத்துமிடம் ஒன்று மேலும் சகல பொது/புழக்க உரிமைகள் இதில் அடங்கும். எல்லைகள்: கிழக்கு: திறந்த வெளி தெற்கு: வான்வெளி மற்றும் மின் தூக்கி மேற்கு: பொதுவான தாழ்வாரம் வடக்கு: திறந்த வெளி	ரூ. 21,77,559.32/- (19.10.2026 அன்றுள்ளபடி)	ரூ. 22,00,000/- / ரூ. 2,20,000/-	04.11.2026 முற்பகல் 11.00 மணி முதல் நண்பகல் 12.00 மணி வரை	26.11.2026 காலை 10.30 முதல் முற்பகல் 11.30 வரை

இணையவழி ஏலமானது, எமது ஏல முகமையான Value Trust Capital Services Private Limited-ன் இணையத்தளம் வாயிலாக (இணைய இணைப்பு - https://BidDeal.in) நடைபெறும். மொத்த கடன் நிலுவையை மேல் வட்டியுடன் சேர்த்து 25-11-2026 மாலை 5.00 மணிக்குள் செலுத்துவதற்கு கடைசி வாய்ப்பு அடமானதாரர்கள் / அறிவிப்புதாரர்களுக்கு இதன் மூலம் அளிக்கப்படுகிறது. தவறினால், கடனுக்கு ஈடான இந்தச் சொத்து திட்டமிட்டபடி விற்கப்படும்.

ஆர்வமுள்ள ஏலதாரர்(கள்), தங்களது டேவணித் தொகையை (EMD), வரைவோலையை (DD) ('E' நிரல் குறிப்பிட்டுள்ளபடி) ICICI பேங்க் லிட், 40-1-127, 128 மற்றும் 129 RIBG, 4வது தளம், முரளி சேம்பர்ஸ், M.G.ரோடு, விஜயவாடா-520010 என்ற முகவரியில் 25-11-2026 நாளன்று மாலை 5.00 மணிக்குள் அல்லது அதற்கு முன்பு சமர்ப்பிக்க வேண்டும். அதன் பிறகு, அவர்கள் தங்களது ஏலப்புள்ளிகளுடன், EMD செலுத்தியதற்காக வங்கி ஒப்புகை அளித்த DD ஆதாரத்தை ஸ்கேன் செய்து மேற்குறித்த இணையதளத்தில் 25-11-2026 அன்று மாலை 5:00 மணிக்குள் அல்லது முன்னர் சமர்ப்பிக்க வேண்டும். மேற்படி இணையத் தளத்தில் தங்களது ஏலப்புள்ளிகளைச் சமர்ப்பிக்க முடியாமல் போகும் ஏலதாரர்கள் அதற்கான டெண்டர் ஆவணங்களின் கையொப்பமிட்ட பிரதிகளை 25-11-2026 நாளன்று மாலை 5:00 மணிக்குள் அல்லது அதற்கு முன்பு ICICI பேங்க் லிமிடெட், 40-1-127,128 மற்றும் 129 RIBG, 4வது தளம், முரளி சேம்பர்ஸ், M.G.ரோடு, விஜயவாடா-520010 என்ற முகவரியில் சமர்ப்பிக்க வேண்டும். EMD தொகையானது "ICICI Bank Limited" என்ற பெயரில் விஜயவாடாவில் மாற்றத்தக்க வகையிலும் ஒரு தேசியமயமான / ஷெட்யூல்டு வங்கியின் DD/PO வடிவிலும் இருந்திட வேண்டும் என்பதை கனிவுடன் கவனத்தில் கொள்ளவும்.

மேலும், மின் ஏலம் அல்லது டெண்டர் சமர்ப்பிப்பது பற்றிய கூடுதல் விளக்கங்களுக்கும் தொடர்பான விதிமுறை நிபந்தனைகளுக்கும் சொத்துகளைப் பார்வையிடுவதற்கும் தொடர்பு கொள்ளவும்: ICICI பேங்க் லிமிட்டெட் ஊழியர் அலைபேசி எண் 8008999536 / 8008277236.

காரணம் எதையும் குறிப்பிடாமல் எந்தவொரு அல்லது அனைத்து ஏலப்புள்ளிகளையும்நிராகரிக்க அதிகாரபூர்வ அலுவலருக்கு உரிமையுண்டு.

விற்பனை குறித்த விரிவான விதி முறை நிபந்தனைகளுக்கு பார்க்க வேண்டிய இணையத்தளம் : www.icicibank.com/n4p4s

தேதி : 04.11.2026
இடம் : சென்னை
அதிகாரப்பூர்வ அலுவலர்
ICICI பேங்க் லிமிட்டெட்

SMFG இந்தியா கிரெடிட் கம்பெனி லிமிட்டெட்
SMFG India Credit
பெருநிறுவன அலுவலகம்: 11ஆவது தளம், C விங், எம்பாசி 247, லால் பகதூர் சாஸ்திரி மார்க், காந்தி நகர், விக்ரோலி (மேற்கு), மும்பை, மகாராஷ்டிரா-400083.

அசையாச் சொத்துக்கள் விற்பனைக்கான விற்பனை அறிவிப்பு

அசையா சொத்துகளின் விற்பனைக்கான 15 நாள் மின்-ஏல விற்பனை அறிவிப்பு.- 2002-ம் ஆண்டு கடனீட்டுச் சொத்துகளை ரொக்கமாக்குதல், நிதிச் சொத்துகளைச் சீரமைத்தல் மற்றும் கடனீட்டுச் சொத்துகள் மீதான உரிமை அமலாக்கச் சட்டத்தின் கீழ் மற்றும் அதற்குத் தொடர்புடைய 2002-ம் ஆண்டு கடனீட்டுச் சொத்துகள் மீதான உரிமை (அமலாக்க) விதிகள், விதி 8 & 9 ஷரத்துகளின்கீழ்

இதன் மூலம் பரவலாக பொது மக்களுக்கும், குறிப்பாக கடன்தாரர்களுக்கும், ஜாமீன்தாரர்களுக்கும் அறிவிப்பது யாதெனில்: ஈடு பெற்று கடன் வழங்கியுள்ள இந்நிறுவனத்திடம் அடமானம் / ஈடு வைக்கப்பட்டுள்ள இங்கே விவரிக்கப்பட்டிருக்கும் சொத்துகள், ஈடுபெற்றுக் கடனளித்த SMFG இந்தியா கிரெடிட் கம்பெனி லிட். நிறுவனத்தின் அதிகாரபூர்வ அலுவலர் அவர்களால் சுவாதீனத்தில் (Possession) எடுத்துக் கொள்ளப்பட்டு, அந்தச் சொத்துகள், பின்வரும் கடன்தாரர்கள் மற்றும் ஜாமீன்தாரர்களிடமிருந்து ஈடுபெற்றுக் கடனளித்த SMFG இந்தியா கிரெடிட் கம்பெனி லிட். நிறுவனத்துக்கு சேர வேண்டிய பின்வரும் கடன் பாக்கி மற்றும் அத்தொகை வசூலிக்கப்படும் தேதி வரையான மேல்வட்டி மற்றும் இதர செலவுகள் சேர்த்து வசூலிப்பதற்காக கீழ்க்காணும் நாள் மற்றும் நேரத்தில் **"உள்ளது உள்ள இடத்தில் உள்ளது உள்ளவாறு, உள்ளது என்னவோ அது"** எனும் அடிப்படையில் விற்கப்பட உள்ளன. குறைந்தபட்ச கேட்பு விலை, டேவணித் (EMD) தொகை மற்றும் டேவணித் தொகை செலுத்துவதற்கான இறுதித் தேதி ஆகியவையும்கூட கீழே குறிப்பிடப்பட்டுள்ளன.

கடன்தாரர்கள் / ஜாமீன்தாரர்கள் / கடன் கணக்கு எண்.	கோரிக்கை அறிவிப்பு நாள் மற்றும் தொகை	அசையா சொத்து விவரம்	குறைந்தபட்ச கேட்பு விலை, டேவணித் தொகை & டேவணித் தொகை செலுத்த கடைசி நாள்	மின்-ஏல நாள் மற்றும் நேரம்
1. ரமேஷ் R 2. சங்கரேஸ்வரி ரத்தினமணி 3. தீபா ரமேஷ் 4. ரமேஷ் ஸ்டோர் கடன் கணக்கு எண்: 214120911649132	04.11.2024 - ரூ.38,34,299.49/- (ரூபாய் முப்பத்தெட்டு இலட்சத்து முப்பத்து நான்காயிரத்து இருநூற்றுத் தொண்ணூற்று ஒன்பது மற்றும் பைசா நாற்பத்தொன்பது மட்டும்)	இன்றியமையாப் பகுதிகள் அனைத்துடனும் கூடிய 10 செண்ட் (4360 சதுர அடி) பரப்பளவு கொண்ட நிலம். சர்வே எண் 378/7a, இது நெய்வேலி கிராமத்தில் அமைந்துள்ளது. இது எல்லாபுரம் ஒன்றியம் மற்றும் நெய்வேலி கிராம ஊராட்சி எல்லைக்கு உட்பட்டது. அமைவிடம் - ஊத்துக்கோட்டை வட்டம், திருவள்ளூர் பதிவு மாவட்டம் மற்றும் ஆரணி சார்பதிவாளர் அலுவலக வட்டாரம். எல்லைகள் பின்வருமாறு: கிழக்கு: பனப்பாக்கம் ஏழுமலை நிலம், மேற்கு: திருக்கண்டலம் செல்லும் பிரதான சாலை, வடக்கு: கனகராஜ் மற்றும் ரங்கநாதன் ஆகியோரின் நிலங்கள், தெற்கு: கனகராஜ், திருவேங்கடம், நீலகண்டன் ஆகியோரின் நிலம். இது திருவள்ளூர் பதிவு மாவட்டம் மற்றும் ஆரணி சார்பதிவாளர் அலுவலக வட்டாரத்திற்கு உட்பட்டது.	குறைந்தபட்ச விலை: ரூ.3420000/- (ரூபாய் முப்பத்து நான்கு இலட்சத்து இருபதாயிரம் மட்டும்) டேவணித்தொகை: ரூ.342000/- (ரூபாய் மூன்று இலட்சத்து நாற்பத்திரண்டாயிரம் மட்டும்) டேவணித்தொகை தாக்கல் செய்வதற்கான கடைசி நாள்: 24.11.2026	நாள்: 25.11.2026 நேரம்: முற்பகல் 11:00 மணி முதல் பிற்பகல் 02:00 மணி வரை (எண்ணிக்கை வரம்பின்றித் தலா 5 நிமிடங்கள் கால நீட்டிப்படையும் வகையில்)

விற்பனைகுறித்த விரிவான விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகளுக்கு தொடர்பு கொள்க: 1) திரு. A.ஜெகதீஷ்: +91- 9940269562 2)திரு. வேணுகோபால்: +91-9884514531 அல்லது பார்க்கவும்: SMFG இந்தியா கிரெடிட் கம்பெனி லிமிடெட்., / ஈடு பெற்றுக்கடனளித்தவர் இணையத்தளம்: அஃதாவது www.smfgindiacredit.com.இல் கொடுக்கப்பட்டுள்ள இணைப்பு.

நாள்: 04-11-2026
இடம்: சென்னை
ஒம்/- அதிகாரபூர்வ அலுவலர்
SMFG இந்தியா கிரெடிட் கம்பெனி லிமிடெட்

வரி விளம்பரம்

PUBLIC NOTICE

CHANGE OF NAME

பெயர் மாற்றம்
நான், **SHAH URVASI**
(பழைய பெயர்),
W/o. Komal Kumar
பிறந்த தேதி : 13/12/1978
(பிறந்த மாவட்டம் : பூஜ், குஜராத்),
முகவரி : No: 6/4, Flowers Road, 1st Lane, Purasawalkam, Chennai - 600084-இல் வசிக்கும் நான் இனிமேல்
URVASHI K HARAN
(புதிய பெயர்)
என அழைக்கப்படுகிறேன்.
Shah Urvasi
03/11/2026

பெயர் மாற்றம்
நான், **THULASI J G**,
த/பெ.. Gopinath N,
பிறந்த தேதி : 28.11.1997,
பிறந்த இடம்: சென்னை,
வசிப்பிடம்: எண். 4, F3,
அண்ணா தெரு, வெங்கடேஸ்வரா நகர், அனகாபுத்தூர், சென்னை - 600070
இனி முதற்கொண்டு
THULASI GOPINATH
என்று அழைக்கப்படுவேன்
THULASI J G

CHANGE OF NAME
I, **JOTHI**
Wife of Thiru Mani.G,
born on 24th April 1972
(District of Birth: Kerala),
residing at No. 88,
F4, Vijayalakshmi Flat,
Dr. Ambedkar Salai,
Periyar Nagar Extension,
Madipakkam,
Chennai – 600 091,
shall henceforth be known as
SUSAMMA MANI

CHANGE OF NAME
I, **M SWETHA**
W/o Narasimhan
R/o Old No. 14, New No. 26,
B2 J.J.Terrace,
Judge Jumbulingam Street,
Mylapore,
Chennai 600004
changed my name from
M SWETHA
to
SWETHA NARASIMHAN
for all future purposes.

CHANGE OF NAME
I, Old Surname : **Abdul Khader**, Old Given name: **Mohammed Wasif**, S/o. Abdul Khader, DOB: 26/01/2007 residing at No.22/42, Erran Street, Purasawalkam, Chennai - 600007 shall henceforth be known as New Surname:....... (i.e., without Surname) New Given name: **Mohammed Wasif**

CHANGE OF NAME
I, **P. FLORA ANBUSELVI**
Wife of Thiru L.A. Charles,
born on 2nd November 1976
(District of Birth: Thanjavur),
residing at New No. 139,
Old No. 59,
P.V. Koil Street,
Royapuram,
Chennai – 600 013,
shall henceforth be known as
C. FLORA ANBUSELVI

யூனியன் பாங்க் ஆப் இந்தியா
பிராந்திய அலுவலகம் பிராட்வே சென்னை - வடக்கு

மின் ஏல விற்பனை அறிவிப்பு அசையா சொத்துக்களுக்கானது.
யூனியன் பேங்க் பவன், 2வது தளம், 139, பிரகாசம் சாலை, பிராட்வே, சென்னை-600108. போன்: +91 8780015850.
Mail: crld.rochennainorth@unionbankofindia.bank.in

கடனீட்டு சொத்துக்களை ரொக்கமாக்குதல் நிதிச் சொத்துக்களை சீரமைத்தல் மற்றும் கடனீட்டு சொத்துக்கள் அமலாக்கச் சட்டம் 2002 (விதி 8 & 9 சேர்த்து வாசிக்கவும்) பாதுகாப்பு நடைமுறை விதிகள் கீழ் அடமானம் வைக்கப்பட்டுள்ள அசையாச் சொத்துக்களை இ-ஏலம் மூலம் விற்பனை செய்தல்.

இந்த அறிவிப்பின் மூலம் பொதுமக்களுக்கு பொதுவாகவும், கடன்தாரர்கள் மற்றும் ஜாமீன்தாரர்களுக்கு குறிப்பாகவும் அறிவிப்பது யாதெனில், கீழே கையொப்பமிட்டுள்ளவர், **யூனியன் பேங்க் ஆப் இந்தியா**, அதிகாரப்பூர்வ அதிகாரியாக இருக்கிறபடியால், அடமானமாக வைக்கப்பட்டு, வங்கியால் **அடையாள சுவாதீனம்** செய்யப்பட்டுள்ள கீழே விவரிக்கப்பட்டுள்ள சொத்துக்களை, வங்கிக்குச் சேர வேண்டிய கடன் பாக்கித்தொகை, வட்டி மற்றும் இதர செலவுகளை வசூலிக்கும் பொருட்டு மின்னணு ஏலத்தில் விடப்படுகிறது. சொத்துக்களானது **"உள்ள இடத்தில் உள்ளவாறு", 'உள்ளது உள்ளவாறு" மற்றும் "உள்ளதெல்லாம் உள்ளவாறு"** எனும் அடிப்படையில் விற்பனை செய்யப்படும். மேலும் கடன்தாரர்கள்/ஜாமீன்தாரர்கள், குறைந்தபட்ச கேட்பு விலை மற்றும் டேவணித் தொகை கீழே குறிப்பிடப்பட்டுள்ளது.

வ.எண்.1: சென்னை கெல்லீஸ் கிளை : கடன்தாரர் & ஜாமீன்தாரர்கள் பெயர்: திருமதி B ரேவதி, முகவரி (1): முதல் தளம், 19/13, கைலாசம் தெரு, தண்டையார்பேட்டை, சென்னை தமிழ்நாடு - 600081; முகவரி (2): 20, ஜெகநாதன் நகர், Auxilium கல்லூரிக்கு அருகில், வேலூர், தமிழ்நாடு - 632006.

நிலுவை தொகை: 30-09-2026 அன்றுள்ளபடி ரூ. 59,82,031.91 மேலும் வட்டி மற்றும் இதர கட்டணங்கள் உட்பட.

அசையாச் சொத்தின் விவரங்கள்: செங்கல்பட்டு பதிவு மாவட்டம் மற்றும் செங்கல்பட்டு இணை-II சார்பதிவு மாவட்டத்திற்குட்பட்ட, செங்கல்பட்டு, காட்டாங்குளத்தூர் கிராமம், பழைய பட்டா எண்.1698, பழைய சர்வே எண்.284A/1E2, புதிய பட்டா எண்.8976 இன்படி புதிய சர்வே எண்.284A/1E2F இல் அடங்கிய (எண். CR/DDTP எண். 3/2003 இன்படி அங்கீகாரம்பெற்ற) காட்டாங்குளத்தூர் -603203, "இரயில் நகர்", என்ற பெயரில் உள்ள மனைப்பிரிவு, மாதா கோயில் 5வது குறுக்குத் தெரு, மனை எண்.11 இன் பரப்பளவு 1650சதுர அடியில் பிரிக்கப்படாத பங்கு 314சதுர அடி நிலம் அதனுடன் அதில் கட்டப்பட்டுள்ள Jane Constructions Elegant கட்டிடத்தில் தரை தளத்தில் பரப்பளவு 702சதுர அடி சூப்பர் கட்டிடப்பரப்பு கொண்ட ஃப்ளாட் எண்.G-1, எல்லைகள்: வடக்கில்- குடியிருப்பு வீடு, தெற்கில்- காலி மனை, கிழக்கில் - காலி மனை, மேற்கில் - சாலை, நாற்பரப்புகள்: வடபுறம் - 50அடி, தென்புறம்- 50அடி, கிழக்குபுறம்- 33அடி & மேற்குபுறம்- 33 அடி.

குறைந்தபட்ச கேட்பு விலை ₹ 33,71,000/- டேவணித் தொகை ₹ 3,37,100/- ஏலஉயர்வுத்தொகை ₹ 35,000/-

வ.எண்.2: திருவள்ளூர் கிளை : கடன்தாரர் & ஜாமீன்தாரர்கள் பெயர்: (1) சரளா P (விண்ணப்பதாரர்), விநாயகர் கோயில் தெரு, கூளூர் கிராமம் திருத்தணி வட்டம், திருவள்ளூர் - 631204 தமிழ்நாடு (2) பெருமாள். K அவர்களின் சட்டப்பூர்வ வாரிசுதாரர் விநாயகர் கோயில் தெரு, கூளூர் கிராமம் திருத்தணி வட்டம், திருவள்ளூர் - 631204 தமிழ்நாடு.

நிலுவை தொகை: 30-09-2026 அன்றுள்ளபடி ரூ. 7,71,971.40 மேலும் வட்டி மற்றும் இதர கட்டணங்கள் உட்பட.

அசையாச் சொத்தின் விவரங்கள்: திருத்தணி சார்பதிவாளர் அலுவலகத்திற்குட்பட்ட, திருவள்ளூர் மாவட்டம், திருத்தணி வட்டம், எண்.42, கூளூர் கிராமம், பழைய கிராம நத்தம் சர்வே எண்.86/1, துணைப்பிரிவு புதிய கிராமநத்தம் சர்வே எண்.226/8 இல் அடங்கிய காலி நிலத்தின் கூட்டுப்பரப்பளவு 3246 சதுர அடி காலி வீட்டு மனை அதனுடன் தற்போதுள்ள மேற்கட்டுமானத்துடன் கூடிய கட்டிடம் அதனைச் சார்ந்த அனைத்து துண்டு மற்றும் பகுதி, பின்வருமாறு **எல்லைகள் :** வடக்கில்: திரு. R. தேவராஜ் அவர்களின் உரிமைப்பெற்ற வீடு, தெற்கில்: திருமதி. வள்ளியம்மாள் அவர்களின் உரிமைப்பெற்ற வீடு, கிழக்கில்: பொது தெரு, மேற்கில்: சிதம்பரம் நிலம். **நாற்பரப்புகள்:** கிழக்கு மேற்காக வட புறம்: 148அடி; கிழக்கு மேற்காக தென் புறம்: 154 அடி; வடக்குத் தெற்காக மேற்கு புறம்: 20 அடி; வடக்குத் தெற்காக கிழக்கு புறம்: 23 அடி; **மொத்தம் 3246சதுர அடி.**

குறைந்தபட்ச கேட்பு விலை ₹13,00,000/- டேவணித் தொகை ₹1,30,000/- ஏலஉயர்வுத்தொகை ₹ 13,000/-

மின் ஏல தேதி & நேரம் : 10.12.2026 நேரம்: மதியம் 12 மணி முதல் மாலை 5 மணி வரை (10 நிமிட கால நீட்டிப்புகள் தொடர்ந்து தானாகவே தரப்படும்)

வங்கிக்குத் தெரிந்தவரை மேற்குறிப்பிட்ட சொத்திற்கு வில்லங்கங்கள் ஏதுமில்லை இருப்பினும், ஏலதாரர்கள் ஏலத்தை சமர்ப்பிப்பதற்கு முன் வில்லங்க சான்றிதழினை சரிபார்க்க அறிவுறுத்தப்படுகிறார்கள்)

விருப்பமுள்ள ஏலதாரர்கள் பதிவு மற்றும் கையேடு பற்றிய https://baanknet.com என்ற இணையதளத்தை பார்க்கலாம் மற்றும் ஏதேனும் கேள்விகளுக்கு 8291220220 எண்களிலும் & மின்னஞ்சல்: support.baanknet@psballiance.com கேட்டு கொள்ளலாம்., மேலும் விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகளை விவரங்களுக்கு https://baanknet.com மற்றும் https://www.unionbankofindia.co.in/auction-property/view-auction-property.aspx. என்ற வலைதளத்தில் காணலாம். ஏலம் தொடர்பான சந்தேகங்களுக்கு யூனியன் பேங்க் பவன், 2வது தளம், 139, பிரகாசம் சாலை, பிராட்வே, சென்னை-600108. போன்: +91 8780015850. Mail: crld.rochennainorth@unionbankofindia.bank.in

பிணைய நலன் (அமலாக்க) சட்டம் 2002-இன் விதி 8 & 9 இன் கீழ் நாட்கள் சட்டப்பூர்வமான 30 நாட்கள் விற்பனை அறிவிப்பு.
மேற்குறிப்பிட்ட தேதியில் மின்-ஏல விற்பனை நடைபெறுவது குறித்து, பிணைய நலன் (அமலாக்க) சட்டம் 2002-இன் விதி 8 & 9 இன் கீழ் இந்த அறிவிப்பானது கடன்தாரர்/கள் மற்றும் ஜாமீன்தாரர்/கள் மேற்குறிப்பிட்ட கடன் தொகையினை செலுத்துவதற்கான அறிவிப்பாகவும் கருதப்படும்.

தேதி : வ.எண் 1: 30.10.2026 ; வ.எண் 2: 03.11.2026
இடம் : சென்னை
அங்கீகரிக்கப்பட்ட அதிகாரி,
யூனியன் பேங்க் ஆப் இந்தியா

பேங்க் ஆப் பரோடா India's International Bank — 119 Foundation Year
பிராந்திய அலுவலக ஒடுக்கப்பட்ட சொத்து மீட்பு கிளை (ROSARB)
சென்னை ரூரல் ரீஜியன், எண்.123, மெஸ்ஸனைன் தளம், துகார் டவர்ஸ், RL சாலை, எழும்பூர், சென்னை-600 008.
Phone: 044-28885428, E-mail: sarcmt@bankofbaroda.bank.in; Web: www.bankofbaroda.bank.in

அசையா சொத்துக்களின் விற்பனைக்கான மின் ஏல விற்பனை அறிவிப்பு

பிற்சேர்க்கை IV – A யின்படி (விதி 6 (2) மற்றும் 8 (6) யை பார்க்கவும்)
2002-ம்ஆண்டு கடனீட்டுச் சொத்துக்கள் அமலாக்கச் சட்ட விதிகளின் கீழ் 8(6) & 6(2) இன் கீழ் வைக்கப்பட்டுள்ள அசையாச் சொத்துக்களை விற்பனை செய்தல்

கடன்தாரர்/ ஜாமீன்தாரர்/ அடமானதாரர் மற்றும் பொதுமக்களுக்கு இந்த அறிவிப்பின் மூலம் தெரிவிக்கப்படுவது என்னவென்றால், கீழே குறிப்பிடப்பட்டுள்ள சொத்துக்களை பாங்க் ஆஃப் பரோடா வங்கியின் அங்கீகரிக்கப்பட்ட அதிகாரி அவர்களால் சுவாதீனம் செய்யப்பட்ட கீழே உள்ள சொத்துகள் "எங்கு உள்ளதோ அப்படியே" "எப்படி உள்ளதோ அப்படியே" மற்றும் "என்ன இருக்கிறதோ அதே நிலையில்" என்ற அடிப்படையில் வங்கியில் பெறப்பட்ட கடனுக்காக கீழே குறிப்பிடப்பட்டுள்ள கடன் மற்றும் செலவுகளை திரும்பப் பெறும் நோக்கத்துடன் மின் ஏலம் மூலம் விற்பனை செய்யப்பட உள்ளது, கடன்தாரர்/ ஜாமீன்தாரர்/ அடமானதாரர் விவரம், நிலுவைத் தொகை, சொத்து விவரம், குறைந்த பட்ச கேட்பு விலை, மின்னணு ஏலத் தேதி மற்றும் நேரம், டேவணித் தொகை மற்றும் ஏல அதிகரிப்பு தொகை ஆகியவை கீழே குறிப்பிடப்பட்டுள்ளன.

வ.எண்.1: கடன்தாரர்கள்/ஜாமீன்தாரர்கள்/அடமானதாரர்களின் பெயர் & முகவரி: கடன்தாரர் திரு. பாலமுருகன் நடராஜன், C 97, முதல் தளம், 4வது குறுக்குத் தெரு, குறிஞ்சி நகர், ராமாபுரம், சென்னை 600089.

மொத்த நிலுவைத் தொகை: 31.10.2026 அன்றுள்ளபடி ரூ. 53,97,296.55/- மேலும் 31.10.2026 அன்று முதல் செலுத்த வேண்டிய வட்டி பிற கட்டணங்கள் மற்றும் சட்ட செலவீனங்கள். சுவாதீனம் நிலை : மெய்நிலை

அசையா சொத்தின் விரிவான விவரங்கள்: அட்டவணை தென் சென்னை பதிவு மாவட்டம் மற்றும் கூடுவாஞ்சேரி சார்பதிவு மாவட்டத்திற்குட் பட்ட, ஊராட்சி யூனியன் எல்லைகுட்பட்டு அமைந்துள்ள காஞ்சிபுரம் மாவட்டம், குன்றத்தூர் வட்டம், எண்.193 அந்தனூர் கிராமத்தின் சர்வே எண்.344/4A, பட்டா எண்.5653, பட்டாவின் படி புதிய துணைப்பிரிவு சர்வே எண்.344/2 இல் அடங்கிய CSAR/DTP-M-86-130/LP-105 மற்றும் ROC., எண்.2290/86 CSAR-4 இன் அங்கீகாரம் பெற்ற 'M.G.Nagar-V' இன் மனை எண்.185 இன் விஸ்தீரணம் 2988 சதுர அடி நிலத்தின் பிரிக்கபடாத பங்கு 496 சதுர அடி நிலம் அதனுடன் அதில் கட்டப்பட்டுள்ள குடியிருப்பு கட்டிடத்தின் இரண்டாம் தளத்தின் 949 சதுர அடி தரைப்பரப்பு கொண்ட குடியிருப்பு அப்பார்ட்மெண்ட் பிளாட் எண்.S2, அதனை சார்ந்த அனைத்து துண்டு மற்றும் பகுதி, அதனுடன் அனைத்து உரிமைகள், கார்பார்க்கிங் உட்பட, எல்லைகள் : வடக்கில் : காலி நிலம், தெற்கில் : மனை எண்.184, கிழக்கில் : 30 அடி சாலை, மேற்கில் : காலி நிலம், நாற்பரப்புகள் : கிழக்கு மேற்காக வடபுறம் : 85 அடி, கிழக்கு மேற்காக தென்புறம் : 81 அடி, வடக்க தெற்காக கிழக்குபுறம் : 34 அடி, வடக்கு தெற்காக மேற்குபுறம் : 38 அடி, அனைத்துப்பரப்பு 2,988 சதுர அடி. Latitude 12.8675366, Longitude 80.0574967.

குறைந்தபட்ச கேட்பு விலை ₹ 29,90,000/- டேவணித் தொகை ₹ 2,99,000/- ஏல உயர்வு தொகை ₹ 25,000/-

வ.எண்.2: கடன்தாரர்கள்/ஜாமீன்தாரர்கள்/அடமானதாரர்களின் பெயர் & முகவரி: கடன்தாரர் : திரு.கஜன்.S, 13/26, ஸ்ரீ அன்னை பிளாட் F, மேட்டு காலனி தெரு, ஆதம்பாக்கம், சென்னை 600 088.

மொத்த நிலுவைத் தொகை: 31.10.2026 அன்றுள்ளபடி ரூ. 34,05,313.06/- மேலும் 31.10.2026 அன்று முதல் செலுத்த வேண்டிய வட்டி பிற கட்டணங்கள் மற்றும் சட்ட செலவீனங்கள். சுவாதீனம் நிலை : மெய்நிலை

அசையா சொத்தின் விரிவான விவரங்கள்: அட்டவணை : தென் சென்னை பதிவு மாவட்டம் மற்றும் கூடுவாஞ்சேரி சார்பதிவு மாவட்டத்திற்குட்பட்ட, காஞ்சிபுரம் மாவட்டம், ஸ்ரீபெரும்புதூர் வட்டம், தற்போது குன்றத்தூர் வட்டம், எண்.112, **ஆதனூர் கிராமத்தின்** பழைய சர்வே எண்.370/3, பட்டா எண்.3088 இன்படி புதிய சர்வே எண்.370/3B1 & 370/97 இல் அடங்கிய (எண்.LP/DTCP. எண்.351/2002 இன்படி அங்கீகாரம்பெற்ற) மனைப்பிரிவு **"அன்னை வேளாங்கன்னி நகர்", மனை எண்.3,** இன் பரப்பளவு **2100சதுர அடியில் பிரிக்கப்படாத பங்கு 323சதுர அடி நிலம்** (பொதுப் பரப்பு உட்பட) **தரை தளத்தில் பரப்பளவு 686சதுர அடி** கொண்ட குடியிருப்பு அப்பார்ட்மெண்ட் **ஃப்ளாட் எண்.G2,** அதனைச் சார்ந்த அனைத்து துண்டு மற்றும் பகுதி, **எல்லைகள்:-** வடக்கில்- காலி நிலம், தெற்கில்- 30அடி சாலை, கிழக்கில்- 23அடி சாலை, மேற்கில்- மனை எண்.2, **நாற்பரப்புகள்:-** வடக்கில்- 35அடி, தெற்கில்- 35அடி, கிழக்கில்- 60அடி, மேற்கில்- 60அடி. Latitude 12.863886 Longitude 80.055522

குறைந்தபட்ச கேட்பு விலை ₹ 27,50,000/- டேவணித் தொகை ₹ 2,75,000/- ஏல உயர்வு தொகை ₹ 25,000/-

EMD தொகை செலுத்த கடைசி தேதி : வ.எண். 1 & 2 : 23-11-2026 அன்று பிற்பகல் 1.00 மணிக்குள் அல்லது அதற்கு முன்பாக

சொத்தினை பார்வையிடும் தேதி & நேரம்: வ.எண். 1 & 2 **17-11-2026,** மதியம் 01.00 மணி முதல் மாலை 05.00 மணி வரை

மின் ஏல தேதி & நேரம் வ.எண். 1 & 2 **23.11.2026** அன்று மதியம் 2 மணி முதல் மாலை 6 மணி வரை | வரம்பற்ற 10 நிமிட அவகாசத்துடன் மின் ஏலம் நடைபெறும்

மேலும் விற்பனைக்கான விரிவான விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகளுக்கு இணையதளமான https://bankofbaroda.bank.in/e-auction & ஆன்லைன் விற்பனைக்கான https://baanknet.com. இணையதள இணைப்பை பார்வையிடலாம். மேலும் விருப்பமுள்ள ஏலதாரர்கள் அதிகாரப்பூர்வ அதிகாரியை தொலைபேசி: 044-28885428 எண்ணிலும் கைபேசி எண். 9444882417 ஆகிய எண்களிலும் தொடர்பு கொள்ளவும்

விதிமுறைகள் & நிபந்தனைகள் அறிய இந்த ஸ்கேன் செய்யவும்

தேதி : 02.11.2026 ;
இடம்: சென்னை
அதிகாரபூர்வ அதிகாரி,
பேங்க் ஆஃப் பரோடா